**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

<u>O.S. NO. 52/2020</u>

**வா.சா.1**

**திரு. ராஜன் (எ) கரிவரதராஜன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு தொடர் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

சுபிக்ஷா கார்டன் அமைப்பதற்காக கிரையம் பெற்ற 3 ஏக்கர் சொத்தானது அண்ணாமலை என்பவரிடமிருந்து கிரையம் பெறப்பட்டதா என்றால் அண்ணாமலை குடும்பத்தாரிடமிருந்து பெறப்பட்டது. வழக்கமாக அதை அண்ணாமலை பூமி என்று சொல்வோம் என்றால் சரிதான். தங்கராஜ் என்பவர் உயிருடன் இருக்கும்போது 3 அயிட்ட சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அவை வா.சா.ஆ.1 முதல் 3 என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் நானோ அல்லது 4 ம் பிரதிவாதியோ சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் போட்டுள்ளேன். 2006 ம் ஆண்டு கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆண்டில் மேற்படி பகுதிஅனைத்தும் விவசாய பூமியாகத்தான் இருந்தது என்றால் சரிதான். 1 ம் அயிட்ட சொத்து தங்கராஜுக்கு முழுக்க முழுக்க பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மனை பிரிவுகளாக பிரிப்பதற்காக உள்ளாட்சி துறையில் அனுமதி பெற்றேனா என்றால் ஆமாம். லேஅவுட்டாக பிரிக்கப்பட்ட 2 ம் அயிட்ட சொத்தை பொறுத்து

தான் அனுமதி பெறப்பட்டது என்றால் சரிதான். 1ம் அயிட்ட சொத்தான 5 ஏக்கரை பொறுத்து அங்கீகாரம் பெறப்படவில்லை, சைட் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா-ஆ.9 ஆவணம் ஒரு சத்தியசீலன் என்பவருடன் கூட்டுவியாபாரம் செய்வதற்காக ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தமான சுபிக்ஷா லேஅவுட் சம்பந்தமானது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் பிரதிவாதிகள் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். எனக்கு எதிராக சத்தியசீலன் காவல்நிலையத்தில் வா.சா.ஆ.8 புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு நானும், சத்தியசீலனும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் இல்லை எங்களுக்குள் பிரச்சனை செய்யக்கூடாது என்று அவர் என்னிடமிருந்து 14 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுக்கொண்டார். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து லேஅவுட் போட்டுள்ளதால் அவர்களுக்கு தெரியாமல் நானும், சத்தியசீலனும் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதே தவறு என்றால்சரியல்ல. அதனால் தான் எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் இல்லை. நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பில் தங்கராஜ் சொத்தை கிரையம் பெறுவதற்கு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி ஒப்பந்தத்திலேயே தங்கராஜ் உயிருடன் இருக்கும்போது லேஅவுட் பிரிப்பதற்காக சொத்து வாங்கியதாக சொல்லியுள்ளேனா என்றால் நினைவில்லை நல்ல விலைக்கு விற்கலாம் என்று சொல்லியுள்ளேன். லேஅவுட்டில் எத்தனை சைட்டுகள் விற்பனை ஆகாமல் உள்ளது என்றால் 60 க்கும் மேல் விற்காமல் உள்ளது. எனக்கு தமிழ்நாடு

மெர்க்கன்டைல் வங்கியில் கடன் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கடனுக்கு ஈடாக லேஅவுட் பூமியை அடமானம் வைத்துள்ளேன் என்றால் இல்லை. இன்றுவரை லேஅவுட்டுகள் விற்காமல் இருப்பதற்கு குறிப்பிட்ட காரணம் என்னவென்றால் விற்பனை செய்வதற்காக 1ம் பிரதிவாதியை அழைத்தேன் வரவில்லை அதற்கிடையே எனக்கும், சத்தியசீலனுக்கும் பிரச்சனை ஏற்பட்டுவிட்டது. 1ம் பிரதிவாதி அவ்வாறு எப்போது வரவில்லை என்று கூறுகிறேன் என்றால் 2019 க்கு பின்னிட்டுவரவில்லை. 2013 லிருந்து 2019 வரை எந்த சைட்டுகளும் விற்பனையாகவில்லை என்றால் சரிதான். சைட்டுகளை விற்கலாம் என்று 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை வாய்மொழியாகத்தான் கேட்டேன் அவர்கள் ஒத்துவரவில்லை. 2013 ம் ஆண்டிலிருந்து 2019 ம் ஆண்டுவரை 1ம்பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி 2013 முதல் 2019 வரை விற்பனை செய்வதற்கு அவரிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை கேட்கவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. 2013 ம் ஆண்டிலிருந்தே எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டதால் தான் சைட்டுகள் விற்பனையாகாமல் இருந்தது என்றும், எனவே உடனடியாக சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணத்தில் அண்ணாமலை பூமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது சுபிக்ஷா லேஅவுட் சம்பந்தமான பூமி என்றால் சரிதான். அதில் அண்ணா என்று குறிப்பிட்டுள்ளது 4 ம் பிரதிவாதியை குறிக்கும் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் கடன் இருப்பதால் சீக்கிரமாக விற்பனை செய்யலாம் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் 1ம் அயிட்ட சொத்தை

பொறுத்து விபரங்கள் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி வா.சா.ஆ.14 ஆவணத்தில் 1ம் அயிட்ட சொத்தை பொறுத்து 5 ஏக்கர் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.10 ஆவணமானது 5 ஏக்கர் 23 சென்ட்டை பொறுத்தான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் பிரதிவாதிகள் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது 4 ஏக்கர் 97 சென்ட் பொறுத்தானது சுபிக்ஷா லேஅவுட் கணக்கு விபரம் என்றால் இல்லை 2 சொத்துக்களுக்கும் உண்டான கணக்கு விபரங்கள் தான். மேற்படி ஆவணத்தில் பிரதிவாதிகள் கையெழுத்து செய்யவில்லை என்பதால் அது அவர்களை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது, இந்த வழக்கிற்காக அதை தயாரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**